2005 செப்டம்பர் 29]

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: இல்லை, இல்லை. அதைத்தான் சொல்ல வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம், நன்றி.

பின்னர், பேரவை பிற்பகல் 1–02 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

33. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்–அலுவல் ஒழுங்கு முறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 8-1-2004 ஆம் நாளிட்ட TNERC/CBR/1/2 எண்ணில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்கு முறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59–வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2005 செப்டம்பர் 29

34. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்–மாநில ஆலோசனைக் குழு ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 8-1-2004 ஆம் நாளிட்ட TNERC/SACR/2/2 எண்ணில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்கு முறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59–வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

35. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்–கலந்தாய் உரைஞர்களின் நியமன ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 8-1-2004 ஆம் நாளிட்ட TNERC/ACR/3/2 எண்ணில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்கு முறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59–வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

36. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்–கட்டணம் மற்றும் அபராத ஒழுங்குமுறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 8-1-2004 ஆம் நாளிட்ட TNERC/Regulations/F&F/4/2 எண்ணில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்கு முறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59–வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

37. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்–மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறை தீர்ப்பாளருக்கான ஒழுங்கு முறை விதிகள் இயற்றியது குறித்து எரிசக்தித் துறையிலிருந்து வரப்பெற்ற 8-1-2004 ஆம் நாளிட்ட TNERC/CGR & EO/6/1 எண்ணில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்கு முறை ஆணையங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 59–வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

38. 2003–2004 ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

2005 செப்டம்பர் 29]

39. 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் *31* அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. *(வருவாய் வரவினங்கள்)* [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் *151 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] *(தமிழ், ஆங்கிலம்)*

40. 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் *31* அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை *(சிவில்)* [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் *151 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] *(தமிழ், ஆங்கிலம்)*

41. 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் *31* அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. *(வணிகம்)* [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் *151 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] *(தமிழ், ஆங்கிலம்)*

42. 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் *31* அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்மீதான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் *151 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] *(தமிழ், ஆங்கிலம்)*

43. தமிழ்நாடு அரசின் *2004–2005* ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் *151 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] *(ஆங்கிலம்)*

44. தமிழ்நாடு அரசின் *2004–2005* ஆம் ஆண்டுக்கான நிதி நிலைக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் *151 (2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] *(ஆங்கிலம்)*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

36. 1997 முதல் *2001* வரை கூட்டுறவுச் சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் செய்த சில ஊழல்கள், முறைகேடுகள் மற்றும் சீர்கேடுகள் குறித்த அறிக்கை. *(தமிழ்)*

※※※※